# தூங்கும் சீஷர்கள்

# [20:6-12]

அப். நட. 20ம் அதிகாரத்தில், பவுல் துரோவாவுக்குச் சென்றது பற்றிப் பதியப்பட்டுள்ள நிகழ்ச்சி நடந்து சில வருடங்களில் லூக்கா சுவிசேஷமும் நடபடிகள் புத்தகமும் எழுதப்பட்டிருக்கலாம். இவ்விரு புத்தகமும் சபைகளின் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.[1] துரோவாவில் முதன் முறையாக இந்தப் புத்தகங்கள் வாசிக்கப்படும்போது நீங்களும் அந்த சபையின் உறுப்பினர்களில் ஒருவராகக் கூடி வந்தீர்கள் என்று கற்பனை செய்து கொள்வோம். முதலாவது தொகுதி யானது வாசிக்கப்படும்போது இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிக் கேள்விப்படுவதில் நீங்கள் பெருமகிழ்ச்சியடைவீர்கள். பின்பு, இரண்டாவது புத்தகம் திறக்கப்பட்டு, சபை நிலை நாட்டப்பட்ட விபரமும், சுவிசேஷம் பரவிய விதமும் வாசிக் கப்படுகையில் அதைக் கேட்டு நீங்கள் பரவசப்படுவீர்கள். துரோவா நகரமானது மக்கெதோனிய தேசத்தானின் அழைப் புடன் தொடர்பு படுத்தப்பட்டுக் குறிப்பிடப்படுகின்றது (அப். 16:8, 11), ஆனால் லூக்காவின் பின்வரும் வார்த்தைகள் வாசிக்கப்படும்போது நீங்கள் விசேஷமாய் உணர்வுப் பெருக்கடைவீர்கள்.

> *புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாட்களுக்குப் பின்பு நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பி பட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்துக்கு அவர்களிடத் தில் வந்து, அங்கே ஏழு நாள் தங்கியிருந்தோம்.*
>
> *வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் … அவர்களுடன் சம்பாஷித்து … (20:6, 7அ அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன).*

பரிசுத்த வரலாற்றில் துரோவாவும் ஒரு பாகமாக இருப்பது

குறித்து அறியும்போது உங்களுக்கு மெய்சிலிர்க்கும் அல்லவா! ஆயினும், ஒரு கணப்பொழுதில், வாசகர் தொடர்கின்றார்:

> அப்பொழுது ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து ... (வ. 9).

நீங்கள் சற்றுச் சங்கடப்படத் தொடங்குவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. எல்லாப் பகுதிகளிலும் கிறிஸ்தவர்களால் இவ் வரலாறு மறுபடி மறுபடி படிக்கப்படும் என்பதை நீங்கள் உணருவீர்கள் - மற்றும், துரோவாவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் இந்த நிகழ்ச்சி மாத்திரமே சிலரின் ஞாபகத்தில் இருக்கும்.

இப்பொழுது அந்தக் கூட்டத்தில் உள்ள ஒரு வாலிபனை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் - ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன்! இந்த வரலாறு வாசிக்கப்படுகையில், அந்த வாலிபன் தனது இருக்கையில் சங்கடத்துடன் நெளிய லாம் என்று நினைக்கின்றீர்களா? அவனது முகம் சிவந்து போகுமா?

"சபையில்"[2] தூங்கி விழுபவர்களில் அநேகமாய் ஐத்திகு முதலாவது நபருமல்ல, உறுதியாகவே அவர் கடைசி நபரும் அல்ல. "மற்றவர்களுடைய தூக்கத்தில் பேசும் கலையே" பிரசங்கம் என்று யாரோ ஒருவர் நகைச்சுவையாக விளக்கம் கொடுத்தார். ஆவிக்குரிய வகையில் ஐத்திகுவின் வழிவந்த ஒருவர் பின்வருமாறு எழுதினார்:

> நான் ஒருபொழுதும் எனது பிரசங்கியாரின் கண்களைப்
> பார்த்ததில்லை;
> அவர் அவைகளில் தெய்வீக ஒளியை மறைக்கின்றார்;
> ஏனெனில் அவர் ஜெபிக்கும்போது அவரது கண்களையும்
> அவர் பிரசங்கிக்கும்போது என்னுடைய கண்களையும்
> மூடச் செய்கின்றார்.

மத்திய யுகங்களில் விசுவாச விலக்கம் அடைந்து சபையா னது மாறுபட்ட தொழில்கள் ஒவ்வொன்றிற்கும் பாதுகாவல்

புனிதர்களைப் பெற்றிருந்தது.[3] யோசேப்பு, தச்சு வேலை செய்பவர்களின் பாதுகாவல் புனிதராகக் கருதப்பட்டார்; அந்திரேயா, மீனவர்களின் பாதுகாவல் புனிதராகக் கருதப் பட்டார். சபையில் தூங்குபவர்கள் எல்லாருக்கும் பாதுகாவல் புனிதராக ஐத்திகு இருக்க வேண்டும் என்று ஒருவர் ஆலோசனை முன் வைத்தார்!

மிக வலுவான முறையில் சங்கடம் உண்டாக்கும் இந்த வரலாற்றைப் பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் வைத்திருப்பது ஏன்? ஐத்திகுவையோ அல்லது துரோவாவில் இருந்த சபையாரையோ சங்கடமடையச் செய்வதற்காக லூக்கா இதை ஒருபொழுதும் எழுதியிருக்க மாட்டார் என்று நான் மறுபடியும் வலியுறுத்துகின்றேன். மாறாக, நாம் கற்றுக் கொள்ளும்படியாக தேவன் தாம் விரும்பிய சில பாடங்களை வைத்திருந்தார். நமது முந்திய கட்டுரையில், நமது வேதவசனப் பகுதியில் இருந்து நாம் ஆதி சபையின் குடும்ப சூழ்நிலையைப் பற்றி எடுத்தோம். இந்தப் பாடத்தில், ஐத்திகுவின் அழிவுக்குரிய சிறு தூக்கத்தில் இருந்து அரிய பல பாடங்களைத் தெரிந்தெடுக்க நாம் விரும்புகின்றோம். (எச்சரிக்கை: எனது வார்த்தைகள் உங்களைத் தூங்கச் செய்து, நீங்கள் நாற்காலியில் இருந்து கீழே விழுவீர்களென்றால், உங்களை உயிர்ப்பிக்கப் பவுல் அங்கிருக்க மாட்டார்!).

## முக்கியமான பாடங்கள்

இந்த நிகழ்ச்சியில் இருந்து பற்றியெடுக்கக் கூடிய பாடங்களை நாம் பார்ப்பதற்கு முன்பு, நாம் இந்த வரலாற்றை மறுகண்ணோட்டமிடுவோம்: பவுலும் அவரது துணையாளர் களும் துரோவாவில் இருந்த பரிசுத்தவான்களுடன் வாரத்தின் முதல் நாளில் கூடி வருவதற்காக ஒரு முழு வாரம் அங்கே காத்திருந்தார்கள் (வ. 6, 7அ). கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளும்படி அவர்கள் கூடிவந்த போது, பவுல் அவர்களுக் குப் புத்தி கூறுவதற்கு அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் (வ. 7ஆ). அவர் மறுநாளில் புறப்படத் திட்டமிட் டிருந்ததாலும், மறுபடியும் அவர்களைப் பார்க்கும்படி அவர் எதிர்பார்த்திராததாலும் (வ. 38), பவுல் “நடுராத்திரி மட்டும்

*பிரசங்கித்துக் கொண்டிருந்தார்" (வ. 7இ). அந்த மேல் வீட்டில் அவர்கள் ஒன்று கூடியிருந்த போது, "அநேக விளக்குகள்" வைத்திருந்ததாக லூக்கா குறிப்பிட்டார் - அந்த எண்ணெய் விளக்குகள் எரிவதற்கு அந்த அறையில் இருந்த ஆக்ஸிஜன் (பிராணவாயு) முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (வ. 8).*

*கூட்டம் மிகுந்த ஒரு அறை, ஆக்ஸிஜன் (பிராணவாயு) குறைபாடு, மற்றும் தாமதமான அந்த வேளை இவை யாவும் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் மீது விளைவை ஏற்படுத்தியது; "அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந் திருந்து, ... மிகுந்த தூக்கமடைந்து நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து (வ. 9அ)." "ஐத்திகு" என்ற பெயரானது "அதிர்ஷ்ட மான" அல்லது "சந்தோஷமான" என்று அர்த்தப்படுகின்றது, இது தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்புடையதாக இருக் கின்றது. நாற்பது வயதுக்குட்பட்ட எந்த வயதினரையும் குறிக்கக் கூடிய பொதுவான கிரேக்கச் சொற்றொடர் ஒன்றினால் ஐத்திகு "வாலிபன்" என்று அழைக்கப்படுகின்றார். மூல வசனப் பிரதியில் அவர், ஒரு "பையன்" என்றும் குறிப்பிடப்படுகின்றார், இச்சொற்றொடரானது ஒரு இளம் குழந்தை அல்லது எட்டுக்கும் பதினாலுக்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞன் ஆகியோரை வழக்கமாய்ச் சுட்டிக் காட்டுகின்றது (வ. 12).*

*வாலிபனான ஐத்திகுவின்மேல் வருடங்கள் பலவாக நாம் கடினப் பார்வையை வீசியிருக்கலாம். அந்த நாட்களில் குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள் இல்லை. அந்தப் பையன் அங்கு வந்து சேருமுன்பு, நாள் முழுவதும் வேலை செய்து, சக்தியிழந்தவனாய் அந்தக் கூட்டத்தில் இருந்திருக்க வேண்டும். ஏற்கனவே ஆலோசித்தபடி, அவர்கள் கூடிவந்திருந்த சுற்றுச் சூழலானது தூக்கமயக்கத்தைத் தூண்டியிருக்கலாம். ஐத்திகு தான் அமர்ந்திருந்த இருக்கையை முதியவர் ஒருவருக்குக் கொடுத்து விட்டு, ஜன்னல் கட்டையின் மீது வசதியற்று அமர்ந்து கொண்டான் என்ற சாத்தியக் கூறும் உள்ளது. (தூக்கம் அதிகமானபோது, தூய காற்றை வேண்டி அவர் ஜன்னலுக் கருகில் சென்றதாகச் சிலர் யோசித்திருக்கின்றார்கள்.)*

இருப்பினும், தனது இளம் வயது மற்றும் கூட்டத்தின் வசதி யற்ற நிலைகள் ஆகியவை இருந்தும் கூட, ஐத்திகு பரிசுத்தவான் களுடன் இருக்கும்படி வந்தான் - மற்றும், ஆராதனை நெடு நேரம் நடந்தாலும், ஐத்திகு சென்று விடவில்லை! கர்த்தரையும் அவரது சபையையும் தெளிவாகவே நேசித்த, மற்றும் வெகு நேரம் நடந்த ஆராதனையில் விருப்பத்தோடு தங்கியிருந்த இவ்வாலிபனைப் பற்றி எனது மனதில் நல்ல மதிப்பு உண்டாகின்றது!

இருந்த போதிலும், அழிவானது அடுத்த சில கணங்களில் ஏற்படுவதாய் இருந்தது. அந்த நாட்களில் ஜன்னல்கள் என்பவை, திறக்கக் கூடிய கதவுகளுடன் சுவர்களில் இருந்த எளிய திறப்புக்களாக இருந்தன. இவ்விதமாக, ஐத்திகு திடீரென்று விழுகையில் அவனைத் தடுத்து நிறுத்துவதற்கு அங்கு ஒன்றும் இருக்கவில்லை. "பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில், ... நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, ... " (வ. 9ஆ). (மர்ஃபியின் விதி[4] என்பது, ஒருவர் எப்பொழுதுமே ஜன்னலுக்கு *வெளியேதான்* விழுவாரே தவிர, *உள்ளே* விழ மாட்டார் என்று கூறுகின்றது). நமது முந்திய பாடத்தில், இந்தப் பையன் "மரித்தவனாய் எடுக்கப்" (வ. 9இ) பட்டபோது அங்கிருந்த சகோதரர்களின் உணர்வுகளைச் சித்தரிக்க நான் முயற்சி செய்தேன்.

பவுல் படிக்கட்டுகளின் வழியே மற்ற உறுப்பினர்களைப் பின்பற்றிக் கீழே சென்றார் (வ. 10); அவர் அங்கிருந்த பலரைக் காட்டிலும் அநேகமாய் வயது முதிர்ந்தவராய் இருந்திருக் கலாம், எனவே அவர் சற்று மெதுவாக இறங்கியிருக்கலாம்.[5] கடைசியில் அந்தப் பையனிடம் சென்று சேர்ந்தபோது, அவர் "அவன் மேல் விழுந்து"(வ. 10ஆ), ஒருவேளை இது எலியா, மற்றும் எலிசா (1 இரா. 17:21; 2 இரா. 4:34, 35) ஆகியோரின் நடக்கையைப் பின்பற்றியதாக இருக்கலாம். "அவனை அணைத்துக் கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான்" (அப். 20:10இ). அந்தப் பையன் விழுந்ததினால் மரிக்கவில்லை என்று பவுலின் வார்த்தைகள் அர்த்தப்படுத்துவதில்லை. ஐத்திகு "மரித்திருக் கலாம் என்று" எண்ணினார்கள் அல்லது "அவன் மரித்துப்

*போனான் என்று அவர்கள் நினைத்தார்கள்" என்று லூக்கா எழுதவில்லை. மருத்துவர் லூக்கா, இந்த இளைஞன் ம-ரி-த்-த-வனாய் எடுக்கப்பட்டான் (வ. 9) என்று கூறினார்.[6] அந்த இளைஞனுக்குள் உயிர் திரும்பி வந்ததாக பவுலின் வார்த்தைகள் குறிப்பிடுகின்றன (வ. 12). இந்த அற்புதமானது மனதில் ஆழப்பதியக் கூடியதாக உள்ளது: முறிந்த எலும்புகள் சரி செய்யப்பட்டு, மூட்டுகள் அவைகளினிடத்தில் திருப்பப் பட்டு, உடைந்து போன இரத்தக் குழாய்கள் சரி செய்யப்பட்டு, சிதைந்த உறுப்புக்கள் மறுபடியும் இயக்க நிலைக்குக் கொண்டு வரப்பட்டு, கிழிந்து போன மற்றும் காயம்பட்ட தசைகள் மறுபடியும் சீரமைக்கப்பட்டு, இருதயம் மறுபடியும் இரத் தத்தை அழுத்தி இயக்கும் வேலையைச் செய்யத் தொடங்கிற்று!*

*அப்போஸ்தலர்களுக்கு இருந்த அதே வல்லமை இன்று தங்களுக்கும் இருப்பதாகச் சிலர் உரிமை கோருகின்றார்கள், ஆனால் ஐத்திகுவை உயிரோடு எழுப்பியது என்ற அந்தச் செயல் போல மறுபடியும் செய்யப்படுவதை நீங்கள் ஒருபொழுதும் காண முடியாது. செய்தித்தாள் துணுக்குகள் பற்றிய என்னு டைய சேகரிப்பில், "விசுவாச-சுகமளிக்கும்" கூட்டங்களில் இருதய அடைப்பால் அல்லது அது போன்றவைகளால் மக்கள் இறந்துபோனது பற்றிய துணுக்குச் செய்திகள் பல உள்ளன. அவர்களில் யாரும் மறுபடியும் உயிரோடு எழுப்பப்பட்டது இல்லை. எங்களது பகுதியில் சிறப்பாய் அறியப்பட்ட "விசுவாச குணமளிப்பவர்" ஒருவர் ஒரு கூடாரத்தில் கூட்டம் நடத்தி னார், கூடாரம் சரிந்து விழுந்தபோது, சிலரைக் கொன்று, பலரைக் காயப்படுத்தியது, "குணமாக்குபவர்" அவர்களில் யாரையும் குணமாக்கவும் இல்லை, மரித்தவர்களை உயிரோடு எழுப்பவும் இல்லை. அப்போஸ்தலர்களுக்கு இருந்த வல்லமை இந்நாட்களில் மக்களுக்கு இருப்பதில்லை.*

*ஐத்திகுவை உயிரோடு எழுப்புவதற்குப் பவுலுக்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம்: முதலாவது அவர் அந்தப் பையனைப் பற்றியும், துரோவா சபையில் இருந்த மற்ற உறுப்பினர்களைப் பற்றியும் கவலைப்பட்டார். இரண்டாவது, அப்போது சற்று முன்னர் பிரசங்கிக்கப்பட்ட செய்தியை, அந்த அற்புதம் உறுதிப்படுத்தியது (மாற். 16:20). இன்னும் வேறொரு நோக்கத்தையும் சிலர் காணுகின்றார்கள். இயேசுவின்*

மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் (அப். 20:7) மற்றும் அந்தப் பையன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதையும் (வ. 9, 10) அந்த சபையார் கொண்டாடிய ஒப்பு நிகழ்வைச் சுட்டிக்காட்டுகின்றார்கள். உயிர்த்தெழுதலின் கருத்தில் உறுப் பினர்களுக்கிருந்த விசுவாசமானது, ஐத்திகுவை உயிரோடு எழுப்பியதால் மதிப்பு மிக்கதாயிற்று!

இதுவே வரலாறு ஆகும். இப்பொழுது நாம் இதிலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் என்று காண்போம்.

**கேட்பவர்களுக்குப் பாடங்கள்**

முதலாவதாக நாம், கேட்பவர்களுக்கான பாடங்களைக் காணுகின்றோம். சபையில் தூங்கி விழுவது என்பது சங்கடத்துக் குரியதாகக் கூடும் என்பது மிகத் தெளிவாக பாடங்களில் ஒன்று ஆகும். ஒருமுறை நான் பிரசங்கித்த ஒரு சபையில், ஒரு மனிதர் விழித்திருக்க வேண்டும் என்பதற்காக அவரது மனைவி தனது முழங்கையால் அவரது விலாவில் இடித்து இடித்து, அதனால் காயம் கொண்டிருந்தார் என்பதை நான் அறிந்தேன். அவரது மனைவி, "ஜார்ஜ் தூங்குவதைப் பற்றிக் கூட எனக்கு அதிகம் கவலையில்லை; ஆனால் அவரது குறட்டை ஒலியானது ஆராதிக்க வந்துள்ள மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இருப்பதுதான் எனக்கு அதிகக் கவலையைத் தருகின்றது" என்று என்னிடம் கூறினார்கள். சபையில் தூங்கி, சங்கடத்தை உண்டு பண்ணும் மனிதர்கள் பற்றி பெரும்பாலான பிரசங்கியார்கள் குறைந்தபட்சம் ஒரு கதையாவது வைத்திருக்கின்றார்கள். பிரசங்கம் தொடங்கியதும் தூங்கத் தொடங்கிய பாடல் நடத்துநரைப் பற்றிய கதையொன்றை எனது நண்பர்களில் ஒருவர் என்னிடத்தில் கூறினார். அவருடைய பிரசங்கத்தில் விரைவிலேயே ஒரு நாடக விளைவுக்காக இடை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. அந்தக் கணத்தில், பாடல் நடத்துநர் விழித்தெழுந்தார். அமைதியை மட்டுமே கேட்ட அவர், பிரசங்கம் முடிந்து விட்டதென்று நினைத்து, உடனடியாக எழுந்தோடி, அழைப்புப் பாடலைப் பாடும்படி வழி நடத்தத் தொடங்கி விட்டார்.

ஐத்திகுவைப் போலச் சிலர் தூக்கக் கலக்கமாயிருப்பதற்கு

*ஏற்ற காரணங்கள் உடையவர்களாய் இருக்கின்றார்கள். சிலர் வியாதி அல்லது தங்கள் சரீர இயல்பு இவற்றினால் பாதிக்கப் படுகின்றார்கள். மருந்தை உண்டு விட்டு வந்த சிலர் ஆராதனை நேரம் முழுவதிலும் தூங்காமல் இருக்கும்படிப் போராட வேண்டியதாகின்றது. சிலர் இரவு முழுவதும் முறை வேலை செய்து பிறகு ஆராதனைக்கு வருபவர்களாய் இருக்கின்றார் கள். அமளி செய்யும் குழந்தைகளினால் அதிகாலை வரை யிலும், தாய்மார்கள் சிலவேளைகளில் விழித்திருக்க வேண்டிய தாகின்றது. நான் கூறுவதைக் கேளுங்கள்: உங்களைத் தூங்கச் செய்யும் காரணத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியாமல் போகின்றபோது, நீங்கள் வருகை புரிந்ததற்காக நான் நன்றி நிறைந்தவனாய் இருக்கின்றேன்!*

*நம்மில் எஞ்சியுள்ள மற்றவர்களைப் பற்றிய விஷயம் என்ன? சனிக்கிழமை இரவு தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்ததினால் அல்லது நண்பர்களைப் பார்க்கச் சென்றதினால் வெகு நேரம் விழித்திருந்துவிட்டு, ஞாயிறுகாலை ஆராதனை யில் தூங்கி விழும் நபர்களைப் பற்றிய விஷயம் என்னவா யிருக்கிறது? ஆவிக்குரிய விஷயங்களில் அக்கறையில்லாதவர் களைப் பற்றிய விஷயம் என்னவாய் இருக்கின்றது? பாடல் பாடுதல் எவ்வளவுதான் ஏவுதலுக்குரியதாயிருப்பினும், பிரசங்கம் எவ்வளவுதான் சிந்தனையைத் தூண்டுவதா யிருப்பினும், மாறுபாடு ஒன்றையும் ஏற்படுத்துவதில்லை; அவர்கள் தங்கள் கண்களைப் பளிங்கு போலவும், அயர்ச்சி யாகவும் வைத்துக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களே என்னைக் கவலைக்குள்ளாக்குகின்றவர்களாவார்கள். மேற் சொன்ன வகைகளில் ஏதாவதொன்றில் நீங்கள் இருந்தால், இதைக் கவனியுங்கள்: மூன்றாம் மாடியில் இருந்து கீழே விழுந்து மரித்தல் (இறத்தல்) என்பது ஒருபோதும் உங்களுக்கு நடைபெறாதிருக்கலாம், ஆனால், உங்கள் ஆவிக்குரிய நிலை யானது கீழ் நோக்கி சரியக் கூடியதாய் இருக்கின்றது - மற்றும் ஆவிக்குரிய மரணம் உடனடியாக ஏற்படலாம்! விழித் தெழுந்து, "ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள" (யோவா. 4:24) இதுவே தக்க நேரம் ஆகும்!*

**பிரசங்கியார்களுக்குப் பாடங்கள்**

ஐத்திகுவின் வரலாற்றில் பிரசங்கியார்களுக்கான ஒன்றிரண்டு பாடங்களையும் காண முடியும். நீ-ண்-ட பிரசங் கங்கள் வேதவசனத்தின்படியானவைகள் என்று நிரூபிப்பதற்கு பிரசங்கியார்கள், நடு இராத்திரி மட்டும் பவுல் பிரசங்கித்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகின்றார்கள். இருப் பினும், அதற்கு முந்திய ஞாயிறன்று பவுல் அங்கு இருந்த தில்லை, மற்றும் அடுத்து வரும் ஞாயிறன்றும் அவர் அங்கு இருக்கப் போவதில்லை என்பதைக் கவனியுங்கள். ஒவ்வொரு ஞாயிறு தோறும் ஒரே கூட்டத்தாருக்குப் பிரசங்கிக்கும் பிரசங்கியார்களின் சூழ்நிலையில் இருந்து அவரது சூழ்நிலை கணிசமான அளவு மாறுபட்டிருந்தது.

பவுலின் செய்தியினுடைய நீளமானது, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நீளமான பிரசங்கம் செய்வதை நியாயப் படுத்துகின்றதே தவிர, வாராவாரம் தமது பிரசங்கத்தைக் கேட்பவர்களை வார்த்தைகளின் ஜாலத்தால் வதைத்து வறுத்தெடுப்பதை நியாயப்படுத்துவதில்லை. மனித உடல் கூறில் இரண்டு முடிவுப் பகுதிகள் உள்ளன என்றும், ஒரு முடிவுப் பகுதியினால் சகிக்க முடிவதையே மற்றொரு முடிவுப் பகுதி உறிஞ்ச முடியும் என்றும் கூறப்படுவதுண்டு. தேவனு டைய பேச்சாளர்கள் என்ற வகையில், நமது பிரசங்கங்கள் தாலாட்டுகளாகி விடாமல் இருக்க நாம் கடினமாய் உழைக்க வேண்டும்.

**சுற்றுச் சூழலைப் பற்றிய ஒரு பாடம்**

கூட்டம் கூடிவரும் இடத்தின் இயல்பான சூழ்நிலைகள் பற்றிய பாடம் ஒன்றையும் நாம் இவ்விடத்தில் காணலாம். "அவர்கள் கூடியிருந்த மேல் வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது" (வ. 8) என்பதை நான் மீண்டும் ஒருமுறை குறிப்பிடுகின்றேன். இது ஒருவேளை பிராணவாயு இல்லா மலிருந்ததற்கான ஒரு காரணமாயிருக்கலாம். கிளாரன்ஸ் ஜோர்டானின் Cotton Patch மொழிப்புரையில், "அந்த மேல்மாடி வீட்டில் வெப்பமாகவும் காற்றோட்டமில்லாமலும் இருந்தது" என்று கூறப்படுகின்றது. இதற்கு முந்திய கட்டுரையில், சபை கூடிவரும் இடம் அடிப்படை முக்கியத்துவமற்றது என்று நான்

கூறியிருந்தேன்; ஆனால் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும்- ஆராதிக்கக் கூடிவரும் இடமானது முடிந்த அளவு ஆராதனைக்குத் துணை புரிவதாக ஏற்படுத்திக் கொள்வது மதிப்புடையதாகும். ஆண்டுகள் பலவாக, குறைவான காற்றோட்டமுள்ள அறைகள் ஆராதிப்பவர்கள் ஆழ்ந்துறங்கத் தாலாட்டுகளைப் பங்களித்திருக்கின்றன.

## மிகவும் முக்கியமான பாடம்

ஐத்திகுவின் வரலாறானது, ஆராதனையில் தூங்கும் செயல் பிரச்சனையாகக் கூடும் மற்றும் அதைப் பரிந்துரைக்க முடியாது என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது-ஆனால் சிலவேளைகளில் உடல் ரீதியான இந்த மயக்கமானது மிக வினயமான பிரச்சனையாகிய “ஆவிக்குரிய ஆழ்ந்த உறக்கம்” என்பதன் வெறும் ஒரு அடையாளமாகவே இருக்கின்றது. கொரிந்தியர்கள் கர்த்தருடைய பந்தியைத் தவறாகப் பயன்படுத்தியதைப் பற்றிப் பவுல் அவர்களுக்குக் கண்டித்து உணர்த்திய பொழுது பவுல், அவர்களின் ஆவிக்குரிய நிலை பற்றியப் பின்வரும் ஆய்வைக் கொடுத்தார்: “இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக் கிறார்கள்; அநேகர் *நித்திரையும்* அடைந்திருக்கிறார்கள்” (1 கொரி. 11:30; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப் படுகின்றன). “சபையில் தூங்குவது” பற்றி நாம் பேசும்பொழுது, சபை கூடுதலைப் பற்றிப் பேசினால் நான் சிறிது கவலைப் படுகின்றேன். இதற்கு மறுபுறத்தில், “சபை” என்பதை நாம் “கிறிஸ்துவின் சரீரம்”[7] என்று அர்த்தப்படுத்தினால், “சபையில் தூங்குகின்ற” மக்களைப் பற்றி நான் மாபெரும் கவலை யடைகின்றேன். மக்களை அவர்களின் ஆவிக்குரிய ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து எழுப்புவது என்பது எந்த ஒரு பிரசங்கி யாருக்கும் உள்ள முக்கியமான பணிகளில் ஒன்றாகும்!

ஆவிக்குரிய வகையில் தூங்கிக் கொண்டிருந்தவர்களிடத் தில் பவுல் அறைகூவல் விடுத்தார்: “நித்திரையை விட்டு எழுந் திருக்கத்தக்க வேளையாயிற்றென்று நாம் அறிந்தவர்களாய், ... ” (ரோமர் 13:11). மறுபடியும் அவர், “ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து

உங்களைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்'' (எபே. 5:14) என்றும் எழுதினார்.

துரோவாவில் இருந்த சகோதரர்களைப் போல நாம் செயல்பட்டால், அது நம்மை மறு வலிவூட்டக்கூடும்: வசதி யற்ற காலம் மற்றும் இடத்திலும் கூட அவர்கள் சபைக்கு வருவதில், கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிப்பதிலும் உண்மையாய் இருந்தார்கள். தேவனுடைய பேச்சாளருக்கும், அவர் பிரசங்கித்த தேவனுடைய வார்த்தைக்கும் கனம் செலுத்தினார்கள். நாம் அவர்களுடைய அடிச்சுவடுகளில் நடப்பது தேவையாகும்.

## முடிவுரை

இவ்வரலாற்றைக் கேட்பவர்கள் யாவருக்கும் இந்தப் பாடங்கள் பயன்படக் கூடியதாயிருக்கிறது: ஆராதனையின் போது, உண்மையிலேயே ஆராதிப்பதற்காக ஒவ்வொருவரும் விழிப்புடன் இருக்கத் தம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். நம்மில் பிரசங்கம் செய்கின்றவர்களுக்கான பாடமாவது: நமது பாடங்களை ஜீவனுள்ளவைகளாகவும், அறைகூவல் விடுப்பவைகளாகவும் காத்துக் கொள்வதற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டியிருக்கலாம். ஆயினும் ஆவிக் குரிய வகையில் நோய்த்தோற்றம் கொண்டவர்களுக்கு மிக முக்கியமான பாடம் என்னவென்றால், "ஆகையால், மற்றவர் கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு, தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்" (1 தெச. 5:6)!

குறிப்புகள்

[1]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் உள்ள அறிமுகச் செய்திகளைக் காணவும். [2]இவ்விடத்தில், "சபையில்" என்பது "[ஆராதனை செய்யும்] கூட்டத்தில்" என்று அர்த்தப்படுகின்றது. "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழின் சொற்பொருள் அகராதியில் "Church"- சபை என்ற வார்த்தையின் கீழ்க் காணவும். "சபையில்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும் சொல்விளையாட்டொன்று பாடத்தின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்படும். [3]"பாதுகாவல் புனிதர்கள்" என்ற கருத்தை வேதாகமம்

போதிப்பதில்லை. இந்தப் பத்தியானது நகைச்சுவைக்காகத் தரப்பட்டுள்ளது. சில பின்னணிகளில் இதைப் போதிப்பதோ அல்லது பிரசங்கிப்பதோ ஏற்புடையதாகாமல் இருக்கக் கூடும். [4]"மர்ஃபியின் சட்டம்" அல்லது - எளிமையாக-"சட்டம்" என்று கூறப்படும் பாதி நகைச்சுவையும், பாதி வினயமும் கலந்த துணுக்குகளைப் பற்றிப் பழக்கமற்றவர்களுக்காகக் கூறப்படுவது: இச்சட்டம், "எதுவெல்லாம் தவறாகக் கூடுமோ, அது வெல்லாம் தவறாகிவிடும்" என்று கூறுகின்றது. [5]அவர், தாம் அந்தப் பையனை உயிர்ப்பிக்க முடியும் என்று அறிந்திருந்தபடியாலும் கூட, மற்றவர்களைப் போல அவ்வளவு பதட்டமில்லாமல் சென்றிருக்கலாம். [6]அந்த இளைஞன் மரித்திருந்தாலும், மரித்திராதிருந்தாலும், ஒரு மாபெரும் அற்புதம் அங்கு நடந்தது. அது உயிர்த்தெழுப்பிக்கப்பட்ட அற்புதமாய் இராது போனாலும், குணமாக்கும் ஒரு அற்புதமாய் இருந்தது. ஆயினும் வசனப் பகுதியானது அப்பையன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதாகத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. இது பேதுரு, பவுல் ஆகியோரின் ஊழியங்களுக்கிடையில் உள்ள பல ஒப்பீடுகளில் ஒன்று ஆகும்: பேதுரு தொற்காளை மரித்தோரினின்று எழுப்பினார் (அப். 9) மற்றும் பவுல் ஐத்திகுவை உயிரோடு எழுப்பினார். [7]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் "Church"-சபை என்ற வார்த்தையின் கீழ்க் காணவும்.

## *புதிய ஏற்பாட்டில்*
## *நித்திரையின் வகைகள்*

I. *மரண நித்திரை (யோவா. 11:11; 1 தெச. 4:13, 14).*

*அ. இது சரீரத்திற்கு மட்டுமே குறிப்பிடப்படுகின்றது (பிலி. 1:21, 23).*

*ஆ. மரணம் நிரந்தரமானதல்ல என்று காண்பிக்கின்றது (1 கொரி. 15:51).*

II. *மாறுபாட்டினாலான நித்திரை (ரோமர் 13:11)*

*அ. இது தெரிவு செய்யப்படுகின்ற ஒன்று ஆகும்.*

*ஆ. காலத்தைப் பற்றி - இரட்சிப்பு அண்மையில் உள்ளது பற்றி/கவனமற்று, எச்சரிக்கையற்று இருக்கக் கூடும்.*

*இ. யுத்தத்தின் தனிச் சிறப்பு பற்றிக் கவனமற்று/ எச்சரிக்கையற்று இருக்கக் கூடும் (மத். 26:36-39).*

III. *ஆவிக்குரிய வியாதியின் நித்திரை (1 கொரி. 11:30).*

*அ. கர்த்தருடைய முறையாக நடக்காததினால் உண்டான விளைவு. கர்த்தரின் பந்தியை முறைப் படியாக ஆசரிக்கத் தவறியதால் அவர்கள் வியாதிப் பட்டவர்கள் ஆனார்கள் என்று பவுல் கூறினார்.*

*ஆ. இது கர்த்தரை விட்டு இன்னும் அதிகமாய் விலகிச் செல்லும் விளைவைத் தருகின்றது. இராப்போஜ னத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்தும்படி அவர்களை அவர்களின் வியாதியானது வழி நடத்தியிருந்தது என்று பவுல் மறைமுகமாய்க் குறிப்பிட்டார்.*

IV. *உடல் களைப்பினால் உண்டாகும் நித்திரை (அப். 16:27; 20:9, 10).*

*அ. நமது கர்த்தருக்குக் கூட நித்திரை தேவையாய் இருந்தது.*

*ஆ. முறையான ஓய்வு பெறுங்கள்.*

*இ. நாம் அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும், நமது உடல்கள் நித்திரை அடையச் செல்லும்.*